# 24. நோவாவும் வெள்ளப் பெருக்கும்

முன்னொரு காலத்தில் பலத்த மழை பெய்தது. அந்த மழை காரணமாக பெரிய வெள்ளம் ஏற்பட்டது. அந்த வெள்ளப் பெருக்கினால் முழு உலகமும் அழிந்தது.



ஆனால் நோவாவும் அவரது குடும்பமும் வெள்ளப் பெருக்கிலிருந்து காப்பாற்றப்பட்டார்கள். நோவா இறை தந்தையிடத்தில் அன்புடையவராக இருந்தார்.

ஆனபடியால் வெள்ளப் பெருக்கைப் பற்றி இறைவன் முன்கூட்டியே நோவாவுக்கு அறிவித்திருந்தார். ஆகவே இறை தந்தை கூறியவாறு நோவா பெரியதொரு கப்பல் செய்தார். அந்தக் கப்பலைச் செய்ய இரண்டு வருடங்கள் எடுத்தன.

கப்பலைச் செய்து முடித்த பின்னர் இறை தந்தை நோவாவுக்கு இவ்வாறு கூறினார். “வெள்ளம் வரப் போகிறது. ஆனபடியால் சகல உயிரினங்களும் ஒவ்வொரு சோடியைக் கப்பலுக்குள் சேர்த்துக் கொள்ளவும். நீரும் உமது குடும்பத்தவர்களும் கப்பலுக்குள் சென்று கதவை மூடிக் கொள்ளுங்கள்” என்று கூறினார். நொவாவும் அவ்வாறே செய்தார்.

அதன் பிறகு பெரிய வெள்ளப்பெருக்கு வந்தது. வெள்ளம் நீண்ட நாட்கள் வரை நீடித்து இருந்தது. முழு உலகமும் அழிந்தது. நோரவா்வும் கப்பலில் இருந்தவர்கள் அனைவரும் காப்பாற்றப்பட்டார்கள். அவர்கள் அனைவரும் மகிழ்ச்சியோடு இறை தந்தையைப் புகழ்ந்து பாடினார்கள்.

1. இயற்கை மலருகிறது

சூரியன் உதித்து பூமியும் மலர்ந்து
மொட்டுக்கள் விரிந்தன மலர்கள் மலர்ந்தன.
இனிமையான கீதம் எங்கும் பிறந்தது
வசந்த கானங்கள் காதில் ஒலித்தது ஆ... ஆ...

தென்றலின் ஓசையிலா ஆ... ஆ...
கானங்கள் தவழ்ந்து வரும் ஆ... ஆ...
இறை அன்பினிலே வரும் இராகங்களால்
நல் உள்ளமும் அமைதி பெறும்

கீழ்வானம் சிவக்கையிலே ஆ... ஆ...
ஆதவன் மறைகையிலே ஆ... ஆ...
காரிருள் சூழ்கையிலே
இறைவன் ஒளியாக வருகின்றான்.

( "வசந்த காலத்தில் வாழ்கின்றேன்" என்ற இராகம்)

2. ஒளியை ஏற்றுவோம்

சிறுவர் நாங்கள் கூடிடுவோம்
பிரிவினைகளை மறந்திடுவோம்
அன்பால் உலகை வென்றிடுவோம்
அமைதி நிலைக்கச் செய்திடுவோம்

தன்னலமற்று வாழ்ந்திடுவோம்
பிறரை அன்பு செய்திடுவோம்
ஒருவர் ஒருவரை நேசித்திடுவோம்
ஒற்றுமையுடன் வாழ்ந்திடுவோம்

பரமன் புகழை பரப்பிடுவோம்
பாவ இருளை நீக்கிடுவோம்
பண்போடு இறைவனைத் தொழுதிடுவோம்
சிறுவர் நாம் இறை அரசைக் கட்டிடுவோம்.

(சிறாருக்கேற்ற இலகுவான இராகத்தைப் பின்பற்றுக.)

3. படைப்பினை மதிப்போம்

இறைவன் தந்த
இனிய படைப்பு
இகமதில் போற்றிடும்
இன்பப் படைப்பு

வாழ்வு தந்திடும்
வார்த்தையாம் படைப்பு
வையகம் வாழந்திட
வழிகாட்டும் படைப்பு

உண்மையை உரைக்கும்
உவப்பான படைப்பு
உலகம் போற்றிடும்
உன்னத படைப்பு

4. எம்மை மாற்றிடுவீர்

அன்பு நிறை யேசுவே
எம் வாழ்வின் ஒளிச்சுடரே
எம் வாழ்வில் நீர் இணைந்து
உயர்ச்சி பெய்திடுவீர்

சாத்தானின் தந்திரத்தில்
தவறி நாம் விழுந்திடாமல்
அவனிதன்னில் காத்து எம்மை
உம் அருளால் நிரப்பிடுவீர்

சிறுவர் எம் பணியினை
சிரத்தையுடன் செய்திடவும்
சிலுவை வழிகாட்டிடுவீர்
அருள் நிறை யேசுவே.

அன்பினில் இணைந்த இறை குலமே" என்ற மெட்டு,

5. பண்புகள் வளர

அழகு உங்களுக்கு வேண்டுமானால்
அதற்காக அடிமை ஆகாதீர்
பண்பு உங்களில் வளர வேண்டுமானால்
பகைமையை அகற்றிடுவீர்.

கல்வியை நன்கு கற்க வேண்டுமானால்
கலக்கத்தை அகற்றிடுவீர்
பாசத்தை வளர்த்திட வேண்டுமானால்
பொறாமையை உதறித் தள்ளிடுவீர்.

புன்னகை முகத்துடன் வாழ வேண்டுமானால்
கோபத்தை அகற்றிடுவீர்
ஒற்றுமையாக வாழ வேண்டுமானால்
தாழ்மையுடன் வாழ்ந்திடுவீர்.

6. பாலனே வருக

மார்கழியில் பிறந்த மன்னவனே வருக
பாலர் கூடி அழைக்கின்றோம் பாரிலே வருக

ஏழைக் குடிலில் பிறந்த அன்பனே வருக
இனிதே அழைக்கின்றோம் இன்பமாய் வருக

மாமரியின் மடியில் வந்த மதவனே வருக
பாலர் நாம் அழைக்கின்றோம் எம்மிடையே வருக

பாலர் நாம் உமக்காய்ப் பணிகள் பல செய்கின்றோம் வருக
வயோதிபரைப் பார்க்கச் செல்லுகின்றோம் வருக.

## 7. என் யேசுவே உனை நான்

என் யேசுவே உனை நான்
மறவேன் - மறவேன்
எந்நாளும் உன் அருளை நான்
பாடி மகிழ்ந்திருப்பேன்.

உன்னாமம் என்வாயில் - நல்
தேனாய் இனிக்கின்றது (2)
உன் அன்பை நாளும் எண்ணும்போது
ஆனந்தம் பிறக்கின்றது.

உன் வாயின் சொல்லமுதாய்
எந்நாளும் வாழ்ந்திடுவேன் (2)
நல்வாழவு நல்கும் வார்த்தை எல்லாம்
பாரினில் முழங்கிடுவேன்.

## 8. அம்மா என் நேசத்தாயே

அம்மா என் நேசத்தாயே
அன்போடெனைப் பாராய்
என் மாலைத்தோத்திரம் இதோ
தோத்திரம் இதோ தயை கூராய்?

பொழுது மேற்கை நோக்கிச் சாய
பொலியு தெங்கும் மௌனமே
தொழுது தேவதாயை வாழ்த்தித்
துதி சொல்வேன் இந்நேரமே

அபயம் என்று வந்த பேரை
அணைத்துக் காக்கும் இராக்கினி
அபய பாதம் தேடும் என்னை
உவந்தென்றென்றும் ஆதரி.